## மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை – 2015

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பவற்றை இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

சபையின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்குகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

சபையினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
| --- | --- |
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 2,197,604,850 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 613,783,717 |
| மொத்தச் சொத்துக்கள் | 2,811,388,567 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,167,051,875 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 1,093,267,215 |
| மொத்தச் பொறுப்புக்கள் | 3,260,319,090 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | (448,930,523) |
| மொத்த பொறுப்புக்கள் | 2,811,388,567 |
| | |
| மொத்த வருமானம் | 1,040,811,290 |
| மொத்தச் செலவினம் | 1,209,653,957 |
| பற்றாக்குறை | 168,842,667 |

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் 18 ஆம் பிரிவு | 2012 ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னர் சபையின் நிரந்தர பதவியொன்றான பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தர நியமனமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 10 ஆம் பிரிவு | செயற்பாட்டு பணிப்பாளரொருவரையும் நிறைவேற்றுப் பணிப்பாளருவரையும் நியமிப்பதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத போது அப்பதவிகளுக்காக பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,738,083 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | பொது முகாமையாளருக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி அங்கீகாரமொன்றில்லாமல் 1182 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 112,290 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2004 சனவரி 08 ஆம் திகதிய 21 ஆம் இலக்க சுற்றறிக்கை | பெருந்தோட்ட அமைச்சின் விழா செலவினத்திற்காக ரூபா 131,079 தொகை சுற்றறிக்கை நியதிகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 மே 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 428 மற்றும் நிதிப் பிரமாணம் 371(2) | (i) திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் சில்லறைக் காசு முற்பண எல்லை ரூபா 100,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.<br>(ii) சுற்றறிக்கையின் பிரகாரம் சில்லறைக் காசு மூலம் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய பெறுமதி ரூபா 1,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையை விஞ்சுவதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் 29 சந்தர்ப்பங்களில் ரூபா 85,227 ஆன பட்டியல் தீர்ப்பனவிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2014 நவம்பர் 21 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் 5/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | பணிப்பாளர் சபையினதும் பொது திறைசேரியினதும் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 222,600 ஆன உபகாரப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | 1995 யூலை 21 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் SAI/A/4/34 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 மற்றும் 11 ஆம் பந்திகள் | திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் போப்பிட்டிய தேயிலை தொழிற்சாலை ஆண்டொன்றிற்கு ரூபா 1,200,000 வீதம் 33 வருடங்களுக்கு அரசின் மதிப்பீட்டு அறிக்கை இல்லாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணங்கள் 136 மற்றும் 137 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் அதிகார கையளிப்பும் அங்கீகாரமும் தேவையான போதிலும், அவ்வாறில்லாமல் 11 சந்தர்ப்பங்கிளன் போது ரூபா 828,463 பெறுமதியான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 தேயிலைச் செய்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் பூர்த்தி செய்யப்பட்ட தேயிலையின் ஒரு கிலோவிற்கான உற்பத்திக் கிரயம் (COP) மற்றும் சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) பின்வருமாறு இருந்தது.

| தோட்டத்தின் பெயர் | உற்பத்திக் கிரயம் | | | சாதாரண விற்பனைப் பெறுமதி | | | கிலோ ஒன்றிற்கு பங்களிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| போப்பிட்டிய | 542 | 555 | 610 | 269 | 265 | 210 | (273) | (290) | (400) |
| போஹில் | 614 | 473 | 582 | 236 | 254 | 261 | (378) | (219) | (321) |
| தெல்தோட்டை | 548 | 467 | 313 | 281 | 273 | 210 | (267) | (194) | (103) |
| கலபொட | 599 | 550 | 614 | 252 | 271 | 265 | (347) | (279) | (349) |
| கிரேட்வெலி | 743 | 632 | 637 | 269 | 326 | 211 | (474) | (306) | (426) |
| ஹந்தான | 536 | 499 | 371 | 254 | 269 | 227 | (282) | (230) | (144) |
| ஹொப் | 481 | 508 | 390 | 290 | 403 | 589 | (191) | (105) | 199 |
| கந்தல்ஓய | 652 | 726 | 451 | 283 | 425 | 211 | (369) | (301) | (240) |
| கொலபத்தன | 383 | 358 | 350 | 249 | 267 | 255 | (134) | (91) | (95) |
| லெவடன் | 453 | 456 | 348 | 265 | 314 | 434 | (188) | (142) | 86 |
| லூல்கந்துர | 404 | 406 | 325 | 274 | 321 | 460 | (130) | (85) | 135 |
| மஹவில | 468 | 483 | 287 | 253 | 255 | 267 | (215) | (228) | (20) |
| ரஹதுன்கொடை | 509 | 444 | 320 | 299 | 303 | 183 | (210) | (141) | (137) |
| ரொக்வுட் | 415 | 377 | 325 | 293 | 278 | 203 | (122) | (99) | (122) |
| நாகஸ்தன்ன | 689 | 763 | 430 | 282 | 333 | 710 | (407) | (430) | 280 |
| கலஹா | - | - | 626 | - | - | 260 | - | - | (366) |
| மவுன்ட்ஜின் | 582 | 477 | - | 276 | 319 | - | (306) | (158) | - |

2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஓர் அலகு கிலோ கிராம் தேயிலையின் உற்பத்திக் கிரயம் (COP), சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) மற்றும் ஒரு அலகுப் பங்களிப்பினை ஒப்பிடும் போது 17 தோட்டங்களின் ஓர் அலகு கிலோ கிராம் தேயிலையின் பங்களிப்பு மறைப் பெறுமதியை எடுத்திருந்ததுடன் அது ரூபா 20 முதல் ரூபா 474 வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் சபையின் உற்பத்தி அலகொன்றின் விற்பனை வருமானத்திலிருந்து அதன் கிரயத்தை மேவுகை செய்ய முடியாதிருந்தது.

(ஆ) தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் நியமங்களின் பிரகாரம் மத்திய நாட்டு தேயிலை ஹெக்டேயர் ஒன்றின் சராசரி பூர்த்தி செய்யப்பட்ட விளைச்சல் 1200 கிலோ கிராம்கள் மாத்திரமாக இருந்ததுடன், சபையின் தோட்டங்களில் ஹெக்டேயர் ஒன்றின் சராசரி பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை விளைச்சல் மீளாய்வாண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை கீழே காட்டப்பட்டுள்ளது.

**ஆண்டு**

| தோட்டம் | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** | **2007** | **2006** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா | கி.கிரா |
| போப்பிட்டிய | 350 | 333 | 345 | 330 | 415 | 488 | 438 | 454 | 481 | 542 |
| போஹில் | 446 | 520 | 595 | 674 | 707 | 593 | 506 | 690 | 570 | 606 |
| தெல்தோட்டை | 342 | 332 | 435 | 453 | 428 | 480 | 481 | 605 | 574 | 571 |
| கலஹா | - | - | 274 | 198 | - | - | 234 | 333 | 302 | 266 |
| கலபொட | 367 | 332 | 390 | 425 | 362 | 425 | 293 | 375 | 325 | 325 |
| கிரேட்வெலி | 215 | 235 | 228 | 260 | 334 | 363 | 412 | 555 | 361 | 347 |
| ஹந்தான | 344 | 342 | 441 | 325 | 387 | 355 | 356 | 489 | 475 | 512 |
| ஹொப் | 552 | 592 | 667 | 672 | 557 | 693 | 645 | 728 | 578 | 659 |
| கந்தல்ஒய | 431 | 482 | 647 | 689 | 691 | 549 | 487 | 529 | 446 | 460 |
| கொலபத்தன | 684 | 805 | 963 | 1008 | 1016 | 939 | 750 | 956 | 706 | 782 |
| லெவடன் | 552 | 607 | 643 | 700 | 738 | 615 | 611 | 755 | 647 | 627 |
| லூல்கந்துர | 674 | 645 | 739 | 830 | 697 | 800 | 736 | 1013 | 870 | 781 |
| மஹவில | 641 | 744 | 857 | 899 | 743 | 619 | 656 | 1024 | 839 | 793 |
| ரஹதுன்கொடை | 422 | 450 | 582 | 527 | 517 | 586 | 325 | 709 | 680 | 582 |
| ரொக்வுட் | 510 | 593 | 612 | 622 | 575 | 668 | 580 | 666 | 550 | 501 |
| நாகஸ்தன்ன | 471 | 433 | 540 | 563 | 515 | 418 | - | - | - | - |
| மவுன்ட்ஜின் | 376 | - | - | - | - | - | - | - | - | - |

தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் நியமங்களின் பிரகாரம் மத்திய நாட்டு தேயிலை ஒரு ஹெக்டேயருக்கு சராசரி பூர்த்தி செய்யப்பட்ட விளைச்சல் 1200 கிலோ கிராம்கள் மாத்திரமாக இருந்ததுடன், 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபையின் அனைத்து தோட்டங்களிலும் விளைச்சல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் பசளைத் தேவைப்பாட்டின் பிரகாரம் 16 தோட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட பசளைச் செலவினம் ரூபா 43,936,405 ஆக இருந்த போதிலும், எவ்விதமான பசளையும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. காலரீதியில் தேவையான பசளை அளவினை இடாமை காரணமாக சபையின் தேயிலைக் கொழுந்தின் தரம் வீழ்ச்சியடைந்ததன் பேரில் பூர்த்தி செய்யப்பட்ட தேயிலைக்காக கேள்வியும் குறைவடையும் ஆபத்தொன்றும் காணப்பட்டது.

(ஈ) தோட்டத்திற்குரிய பாதிடப்பட்ட பச்சைத் தேயிலை கொழுந்து அறுவடை உள்ளவாறான அறுவடையுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| தோட்டங்கள் | பாதிடப்பட்ட பச்சைத் தேயிலை கொழுந்து அறுவடை | உள்ளவாறான கொழுந்து அறுவடை | பாதிடப்பட்ட இலக்கை நோக்கி அடையும் சதவீதம் |
|---|---|---|---|
| | கி.கிரா | கி.கிரா | % |
| போப்பிட்டிய | 282,600 | 157,400 | 56 |
| போஹில் | 450,000 | 43,217 | 10 |
| தெல்தோட்டை | 600,000 | 332,061 | 55 |
| கலபொட | 329,500 | 211,407 | 64 |
| கிரேட்வெலி | 272,600 | 152,203 | 55 |
| ஹந்தான/ கலஹா | 1,434,800 | 795,050 | 55 |
| ஹொப் | 1,174,700 | 845,015 | 71 |
| கந்தல்ஓய | 473,100 | 258,388 | 54 |
| கொலபத்தன | 908,700 | 512,883 | 56 |
| லெவடன் | 2,476,000 | 1,422,223 | 57 |
| லூல்கந்துர | 1,667,000 | 1,375,575 | 82 |
| மஹவில | 565,200 | 323,454 | 57 |
| நாகஸ்தன்ன | 348,000 | 240,578 | 69 |
| ரஹதுன்கொடை | 711,100 | 425,000 | 60 |
| ரொக்வுட் | 1,030,800 | 745,394 | 72 |

சபைக்குரிய 15 தோட்டங்களில் 9 தோட்டங்களின் பாதிடப்பட்ட உற்பத்தி இலக்கை அடைந்து கொள்ளும் சதவீதம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அது 10 சதவீதம் முதல் 60 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது. பாதிடப்பட்ட உற்பத்தி சரியாக மதிப்பீடு செய்யப்படாமை இதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.1.2 இறப்பர் செய்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குமாரவத்த தோட்டத்தின் மொத்தக் காணியின் 31.76 சதவீதமான 579 ஹெக்டேயர் மாத்திரம் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த இறப்பர் செய்கையில் 70 சதவீதம் மாத்திரம் முதிர்ச்சியடைந்த இறப்பர் மரங்களாக இருந்தன. மேலும் முதிர்ச்சியடைந்த இறப்பர் ஹெக்டேயர் அளவில் காணப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 204,225 ஆக இருந்த போதிலும், காணப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 102,375 ஆக அதாவது 50 சதவீதமாகும். 30 சதவீதமான முதிர்ச்சியடையாத இறப்பர் ஹெக்டேயர் அளவில் காணப்பட வேண்டிய நாற்றுக்களின் எண்ணிக்கை 85,165 ஆக இருந்த போதிலும், காணப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 62,004 அதாவது 73 சதவீமாக இருந்தது.

(ஆ) ஹெக்டேயர் ஒன்றிலிருந்து கிடைக்கும் காய்ந்த இறப்பரின் சராசரி 1247 கிலோ கிராம்களாக இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் குமார தோட்டத்தின் காய்ந்த இறப்பர் அளவு 570 கிலோ கிராம்களாகவும் மீளாய்வாண்டின் முதல் 06 மாதங்களில் 363 கிலோம் கிராம்களான குறைந்த அளவில் காணப்பட்டன.

(இ) பால் வெட்டும் மரங்களின் எண்ணிக்கை மற்றும் வெவ்வேறு காரணங்களினால் பால் வெட்ட முடியாத மரங்களை வெவ்வேறாக இனங்காணப்படாதிருந்தமையால் ஒவ்வொரு இறப்பர் தொகுதியில் நியாயமான பால் அளவு பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

(i) சபைக்குச் சொந்தமான 37 ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரித்தான பணிப்பாளர் சபை தீர்மானம் அவதானிக்கப்படாததுடன் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளாமலும் திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) குறித்த குத்தகை காலத்தில் சபையினால் முறைப்படி மாதிரிப்பட்டியல் குத்தகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியின் போது 20 தோட்டங்களுக்குரிய அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை தொகை ரூா 55,089,171 ஆக இருந்தது.

(iii) வதுரவிலவத்த மற்றும் சொமிசந்த தோட்டம் ஆகிய ஆதனங்களின் குத்தகை காலஎல்லை மீளாய்வாண்டின் சனவரி மாதத்தில் முடிவடைந்த போதிலும், இந்த குத்தகை ஆதனங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குத்தகையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் சபையால் குறித்த ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள களஞ்சியத் தொகுதியின் இரண்டு பகுதிகள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த குத்தகைக் காலம் முடிவடைந்த போதும் மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கோ அல்லது ஆதனங்களை கையேற்காத காரணத்தினால் குத்தகையாளரால் அச்சொத்துக்களை கையேற்பதற்காக சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது, வருமானம் உழைக்காமல் அந்த ஆதனங்களுக்காக வழக்கு நடவடிக்கைளுக்காக ரூபா 180,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் அவரால் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை எடுத்துச் சென்றிருந்ததுடன், 05 மாதங்களுக்கு பின்னர் வாகனம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உரிய பரிசோதனை நடாத்தப்பட்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குமாரவத்த தோட்டத்திற்குரிய 321 ஏக்கர் காணி 175 நபர்களினால் 1981 ஆம் ஆண்டு முதல் அத்துமீறி பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் 11 பேருக்கு வெளியேற்றும் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நவம்பர் 12 ஆந் திகதி வரையிலும் உரிய இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பணிப்பாளர் சபை தீர்மானங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாமலும் ஓராண்டு காலத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த குமாரவத்த தோட்டத்தின் தேயிலை விற்பனைச்சாலையின் குத்தகைக்காலம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் குத்தகையாளர் வெளியேறாதிருந்ததுடன் அதுவரை அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை பணம் மற்றும் தண்டப்பணமான ரூபா 1,360,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வெவ்வேறு காரணங்களின் பேரில் சபையினால் சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தருவரும் ஊழியரொருவரும் சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் மூலம் அந்த ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு கட்டளையிடப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 1,364,934 ஆக இருந்தது. குறித்த வழக்கு விசாரணையின் போது அந்த ஊழியர்களின் சேவையை முடிவுறுத்துவதற்கான காரணங்களான விடயங்களை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தாத காரணங்களினால் சபைக்கு இந்த இழப்பீட்டுத் தொகையை செலுத்த நேர்ந்திருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாக 13 தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் அதில் 07 செயற்படாத நிலையில் காணப்படுவதுடன் 02 தொழிற்சாலைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய நான்கு தொழிற்சாலைகளில் மொத்த உற்பத்தி இயலளவு நாளொன்றிற்கு 38000 கிலோ கிராம் கொழுந்தாக இருந்த போதிலும், உற்பத்திக்காக நாளொன்றிற்கு கொழுந்து பெறுவனவு 26,054 கிலோ கிராமிற்கு குறைந்த அளவொன்றாக இருந்தது. இவ்வாறு தொழிற்சாலை குறைவான பயன்பாட்டுடன் செயற்படும் போது மீளாய்வாண்டின் போது வெளித்தரப்பினருக்கு 1,227,226 கிலோ கிராம் கொழுந்து விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) குமாரவத்த தோட்டத்தின் மூலம் பேணிச்செல்லப்பட்டிருந்த கணனி தகவல் முறைமையின் பிரகாரம் 2015 ஒக்தோபர் மாதத்திற்குரிய உலர்த்தப்பட்ட இறப்பர் பால் உற்பத்தி 12,497 கிலோ கிராம் ஆக இருந்ததுடன் கணக்காய்வாளரின் கணிப்பிடலின் பிரகாரம் அது 17,646 ஆக இருந்தமையால் 5149 கிலோகிராம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. உலர்த்திய இறப்பர் அமைப்பிற்குரிய நியமத்தினை விட குறைந்த பெறுமதியொன்று கணனி முறைமைக்கு உட்செலுத்தப்பட்டதன் காரணமாக இவ்வாறு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக முறைகேடுகள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) குமாரவத்த தோட்டத்தின் கணக்காய்வு திகதியின் போது பெற்றுக்கொண்ட இறப்பர் பாலின் அளவு 794 லீற்றராக அத்திகதியில் ஒரு ஊழியரால் சேகரிக்கப்பட்ட சராசரி பாலின் அளவு 33 லீற்றராக இருந்தது. எவ்வாறாயினும் ஏனைய நாட்களில் அப்பெறுமதி 18 லீற்றராக இருந்தமையால் இவ்வாறு குறைவடைவதற்கான காரணங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை இருப்புகளின் விற்பனை விலை விபரங்களில் சராசரி மற்றும் தேயிலை சபையால் மாதாந்தம் வெளியிடப்படும் வலயத்தின் சராசரி விலையுடன் ஒப்பிடும் போது சபையின் பூர்த்திசெய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலை ரூபா 42.98 முதல் ரூபா 153.08 இருந்ததுடன், பாதகமான விலை விலகலுடன் விற்பனை செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வலயத்தின் சராசரி விலையை அடைவதற்கு முடியாதிருந்ததன் பிரகாரம் சபையின் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை பொருத்தமான தரத்தில் காணப்படமையால் மாதமொன்றிற்கு ரூபா 11,112,740 அளவிலான மதிப்பிடப்பட்ட விற்பனை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(உ) குமாரவத்த தோட்டத்தின் 16 ஹெக்டேயரில் அமைந்துள்ள கரும்புச் செய்கை குறிப்பிட்ட காலப்பகுதியில் அறுவடை செய்யப்படாமையால் 13 தொன் அளவிலான கரும்பு வெளிக்களத்தில் சிதைவடைந்தமையால் ரூபா 2,160,000 ஆன மதிப்பீட்டு நட்டமொன்று மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 04 ஹெக்டேயர்களில் பயிரிடப்பட்டிருந்த கரும்புச் செய்கை வெற்றியளிக்காமையால் ரூபா 279,097 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட இழப்புகள்

பச்சைத் தேயிலை கொள்வனவாளரால் சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்திற்காக தேயிலை ஆணையாளரிடமிருந்து நியாயமான விலையை விட குறைந்த விலையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டினுள் ரூபா 766,110 ஆன நட்டமொன்றும் இடம்பெற்றிருந்தது.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

சபையினால் 55 வருடங்களில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட தோட்ட உத்தியோகத்தரொருவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தீர்மானமொன்று மூலம் ஓய்வுபெறச் செய்யப்பட்டமை சட்டரீதியானதென தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கையில் 2 வருடங்களின் பிறகு அப்போதிருந்த தலைவரின் தற்றுனிவின் பேரில் தோட்ட அத்தியட்சகர் பதவி 60 ஆண்டுகள் வரை நீடிக்கபட்டு 08 மாதங்களுக்கு பின்னர் பதில் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். 2013 சனவரி 15 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக 60 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னர் அமைச்சரவை அங்கீகாரமொன்றில்லாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில் மேலும் 06 மாதங்களுக்கு சேவை நீடிக்கப்பட்டிருந்ததுது. அதன் பிரகாரம் சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட இந்நியமனத்திற்குரித்தாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,097,266 ஆக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றுவதற்காக 03 ஆண்டுகளுக்க குறைந்த காலமொன்றுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மூன்று உத்தியோகத்தர்களுடன் கூடிய உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 18 பிரதான தோட்டங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் 07 துறைகளை மேவுகை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 04 தோட்டங்களில் வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.5 பெறுகைகள் திட்டம்

2006 இன் அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2 இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதிவேடுகளைப் பராமரித்தல் | மூல ஆவணங்கள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதை மேற்பார்வை செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், செயலாற்றலை மேம்படுத்துவதற்குரிய தொழில்நுட்ப மற்றும் செயற்பாடுகள் பயன்படுத்தப்படாமை. |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஊழியர்களை ஆட்சேர்த்தல், சட்டவிதிகளுக்கு முரணாக பதவி உயர்வு மற்றும் சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் ஊழியர்களுக்கு முறையாக பொறுப்புக்கள், கடமைகள் கையளிக்கப்படாமை. |
| (ஈ) உள்ளக் கணக்காய்வு | உள்ளக் கணக்காய்வு திட்டம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயறபடுத்தப்படாமை |